


# பத்திரிகையாளர்களின்

ராஜ்

அருமையான மாலைப் பொழுதில், மங்கள இசை ஒலிக்க, 'மூத்த பத்திரிகையாளர் பார்வையில் ஸ்டாலின்' என்ற புத்தகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டார். டாக்டர் பத்மஸ்ரீ கமலஹாசன் பெற்றுக்கொண்டார். நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத் தலைவர் மனோஜ்குமார் சொந்தாலியா இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார். மேடையில் அமர்ந்திருந்த பல்வேறு பத்திரிகை அதிபர்களைப் பார்த்த முன்னணி அமைச்சர்கள் 'அதிசயம் நிகழ்ந்திருக்கிறது' என்றே எண்ணி மகிழ்ந்ததைப் பார்க்க முடிந்தது.

விழா துவங்கியது! ஸ்டாலின் பற்றிப் புகழுரை வாசித்தார் தமிழச்சி தங்கபாண்டியன். அப்போது, 'ராணி மேரி கல்லூரி மாணவிகளுக்கு ஆதரவாகப் போராடிய ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். அன்றிலிருந்து மாணவ, மாணவிகளின் ஆதர்சமான இளம் தலைவர் அவர்தான்' என்று அறிமுகப்படுத்தி, விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றார்.



மனோஜ்குமார் சொந்தாலியா

தலைமை உரையாற்றிய நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் தலைவர் மனோஜ்குமார் சொந்தாலியா, "இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்பதில் பெருமைப்படுகிறேன். பொதுவாழ்விலும், தொழில் துறையிலும் தந்தையை வாரிசுகள் பின்பற்றுவது அடிக்கடி விமர்சிக்கப்படுகிறது. ஆனால், புகழ்பெற்ற தந்தைக்குப் பிள்ளையாக இருப்பது ஒரு விஸிட்டிங் கார்டு மட்டுமே என்பது என் கருத்து. அர்ப்பணிப்பு, கடின உழைப்பு போன்ற வற்றை அந்தத் துறையில் காட்டாவிட்டால் புகழ்பெற முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். எனது தாத்தாவைப் பின்பற்றி நான் வந்தேன். இதன் மூலம் விரைவாக தொழிலைக் கற்றுக் கொண்டு பிறகு எனது கடின உழைப்பைக் காட்டினேன். ஸ்டாலின் கட்சியின் வளர்ச்சிக்காக இளம் பருவத்திலேயே பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டார். குறிப்பாக நெருக்கடி காலத்தில் போலீஸ் டார்ச்சருக்கு உள்ளானார். அடக்குமுறைகளையும் எதிர்கொண்டார். இப்போது மக்களின் உணர்வுகளைத் தெரிந்த பாப்புலர் ஹீரோவாக வளர்ந்திருக்கிற ார் ஸ்டாலின். அனைவருக்கும் நன்கு தெரிந்த பத்திரிகையாளர் சோலை, ஸ்டாலின் படிப்படியாக எதிர்கொண்ட ஒவ்வொரு விஷயங்களையும் அழகாக எழுதியுள்ளார். இந்த நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும்" என்றதும் அரங்கத்தில் கைதட்டல் கிளம்பியது.

இந்நிகழ்ச்சியில் பேசிய தினமலர் ஆர். ஆர்.

